*2022 அக்டோபர் 19*]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினா வரிசை எண் 22, மாண்புமிகு உறுப்பினர் திரு. K. மாரிமுத்து, மாண்புமிகு உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள்.*

**22—**

## வட்ட வழங்கல் அலுவலகத்திற்குக் கட்டடம்

### *12706—திரு. K. மாரிமுத்து:

*மாண்புமிகு உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*திருத்துறைப்பூண்டி தொகுதி, திருத்துறைப்பூண்டி வட்ட வழங்கல் அலுவலகத்திற்குப் புதிய கட்டடம் கட்ட அரசு முன்வருமா?*

**மாண்புமிகு திரு. அர. சக்கரபாணி, உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

*திருத்துறைப்பூண்டி தொகுதி, திருத்துறைப்பூண்டி நகரம், கச்சேரி சாலை, வார்டு A, Block 8, 1.31.00 ஹெக்டேர் பரப்பில் தற்போது அரசு அலுவலகக் கட்டடங்கள் செயல்பட்டு வரும் இடத்தில், வாடகை ஏதும் இன்றி வட்ட வழங்கல் அலுவலகம் செயல்பட்டு வருவதாலும், கட்டடம் நல்ல நிலையில் இருப்பதாலும், தற்போது புதிய வட்ட வழங்கல் அலுவலகக் கட்டடம் கட்ட அவசியம் எழவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. K. மாரிமுத்து அவர்கள்.*

**திரு. K. மாரிமுத்து:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த வளாகத்தில் இருக்கிற கட்டடம் நூறு ஆண்டுகளுக்கு மேலான பழமையான கட்டடம் ஆகும். அதே வளாகத்தில் இருந்த நீதிமன்றம் புதிய கட்டடத்திற்குச் சென்றுவிட்டது; அதே வளாகத்தில் இருந்த காவல் நிலையம் புதிய கட்டடத்திற்குச் சென்றிருக்கிறது; அதே கட்டட வளாகத்தில், அதே காலங்களில் கட்டப்பட்ட வட்டாட்சியர்*

அலுவலகம், புதிய கட்டடத்திற்குச் சென்றிருக்கிறது. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் புதிய கட்டடம் கட்டுவதற்கு மீண்டும் பரிசீலிக்க வேண்டுமென்று தொகுதி மக்களின் சார்பில் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. அர. சக்கரபாணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதிய கட்டடம் தேவைப்படுமானால் எங்கள் துறையின் சார்பாகக் கட்ட முடியாது; வருவாய்த் துறையின் மூலமாகத்தான் கட்டப்படும். எனவே, துறையின் சார்பாக வருவாய்த் துறைக்குப் பரிந்துரை செய்து, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய அனுமதியைப் பெற்று கட்டடம் கட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. K. மாரிமுத்து அவர்கள். நன்றி சொல்லிவிடுங்கள்; அதைச் செய்துதருகிறேன் என்று சொல்லிவிட்டார்களே!

**திரு. K. மாரிமுத்து:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொகுதி மக்களின் சார்பில் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதைப்போல, திருத்துறைப்பூண்டி தொகுதியில், கிழப்பாண்டி என்ற இடத்தில் உள்ள கிடங்குகளிலிருந்து, நியாய விலைக் கடைகளுக்குத் தேவையான உணவுப் பொருள்கள், அங்கிருந்துதான் தொகுதி முழுவதும் வழங்கப்படுகின்றன. ஆனால், 2018 ஆம் ஆண்டில் அடித்த கஜா புயலில் அந்த குடோனின் மேற்கூரையெல்லாம் மிகப் பெரிய அளவில் பழுதடைந்து சிதிலமடைந்திருக்கிறது. அது இன்னும் சரி செய்யப்படாமலேயே இருக்கிறது. எனவே, அதையும் சரி செய்ய வேண்டும்; உணவுப் பொருட்களையெல்லாம் பாதுகாப்பாக வைப்பதற்கு அந்த குடோன் பாதுகாக்கப்பட வேண்டும்.

*முற்பகல் 10-55*

அதேபோல, தற்போது திருத்துறைப்பூண்டி தொகுதியில், குறிப்பாக டெல்டா மாவட்டங்களில் நெல் கொள்முதல் நிலையங்களில் மிக வேகமாக நெல் கொள்முதல் செய்யப்படுகின்றது. அரசாங்கம் பாதுகாப்பான முறையில்

*2022 அக்டோபர் 19]*

*நெல் கொள்முதல் செய்து கொண்டிருக்கிறது. தற்போது கொள்முதல் செய்யப்படுகின்ற நெல் பாதுகாப்பான இடங்களில் வைக்கப்பட வேண்டும். குறிப்பாக, திருத்துறைப்பூண்டி தொகுதியில் நெல்லை வெட்ட வெளியில் வைக்கின்ற சூழ்நிலையெல்லாம் இருக்கிறது. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், திருத்துறைப்பூண்டி தொகுதியில், குறிப்பாக, கோட்டூர் பகுதியில் நெல் சேமிப்புக் கிடங்குகளை அமைத்துத் தருவார்களா என்பதைத் தங்களின் வாயிலாகத் தொகுதி மக்களின் சார்பில் கேட்டு விடைபெறுகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. அர. சக்கரபாணி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய தொகுதியில் கீழப்பாண்டி என்ற இடத்தில் மொத்தம் 1,500 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட 2 கிடங்குகள் உள்ளன. அதில், ஒரு கிடங்கு கஜா புயலால் சேதமடைந்துள்ளது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அனுமதியைப் பெற்று, அது விரைவில் புனரமைத்துத் தரப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

*மேலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், தற்போது தமிழகத்தில் நெல் மழையால் நனைகிறது. திருத்துறைப்பூண்டியில் நெல்லை சேமித்து வைப்பதற்கு* godown *கட்டித் தர வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய அரசு பொறுப்பேற்ற பிறகு, தமிழகத்திலே 103 இடங்களில் திறந்தவெளி சேமிப்புக் கிடங்குகள் இருப்பதை அறிந்து, இனிமேல் அதுபோன்ற திறந்தவெளி சேமிப்புக் கிடங்குகள் இருக்கக் கூடாது என்பதை உணர்த்தி, தமிழகத்திலே சுமார் 238 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 2,86,350 மெட்ரிக் டன் கொள்ளளவுக் கொண்ட மேற்கூரையுடன் கூடிய 20 நெல் சேமிப்புக் கிடங்குகள் கட்டுவதற்கு அனுமதி ஆணையை வழங்கியது. அந்தக் கிடங்குகள் கட்டும் பணிகள் விரைந்து நடைபெற்று வருகின்றன. வரும் நவம்பர் மாதத்திற்குள்ளாக*

அந்தப் பணிகள் முடிக்கப்பெற்று, அவை பயன்பாட்டிற்கு வரவிருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், திருத்துறைப்பூண்டியில் கிட்டங்கி அமைத்துத் தர வேண்டுமென்று கோரிக்கை வைத்திருக்கிறார்கள். அதுகுறித்தும், வருகின்ற காலத்தில் துறைரீதியாக ஆய்வு செய்து, நடவடிக்கை எடுத்து, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய அனுமதியைப் பெற்று கட்டித் தரப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம், தமிழ்நாடு சேமிப்புக் கிடங்குகள் நிறுவனம், கூட்டுறவுத் துறையின் மூலமாகக் கட்டப்பட்ட கட்டடங்கள், அரசாங்கக் கட்டடங்கள் என்று 7,94,000 மெட்ரிக் டன் நெல்லைச் சேமித்து வைப்பதற்காக godowns கண்டறியப்பட்டுள்ளன. எனவே, இதில் 3 இலட்சம், அதில் 8 இலட்சம் என, மொத்தம் 11 இலட்சம் மெட்ரிக் டன் நெல்லைச் சேமித்து வைப்பதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது என்பதை இந்த நேரத்தில் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 23, மாண்புமிகு உறுப்பினர் திரு. V.P. கந்தசாமி, மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

**23—**

### துணை மின் நிலையம்

***1718—திரு. V.P. கந்தசாமி:**

மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சூலூர் தொகுதி, அப்பநாயக்கன்பட்டி ஊராட்சி, அப்பநாயக்கன்பட்டி புதூரில் துணை மின் நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?